கவனிக்க.-2019.05.10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III), பகுதி II மற்றும் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2124 - 2019 මැයි මස 17 වැනි සිකුරාදා - 2019.05.17
2124 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1136 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1140 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2019, யூன் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, மே மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1133-B 81523-5,403 (2019/05)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலூம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலூம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலூவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லூத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலூம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலூவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லூப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலூம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லூமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லூமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லூத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லூத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லூவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லூ விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலூல் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - கேகாலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரரின் வயது 40 இற்கு குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்ட செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய “இணைப்பு 1” உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019, யூன் மாதம் 17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, ஏப்பிறல் 26.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கேகாலை | எட்டியந்தோட்டை | கித்துல்கல பலாத பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கோரளை துன மற்றும் பாத்த புலத்கம பிரிவின் விவாக (கண்டிய/ பொது, பதிவாளர் பதவி மூலம்). | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கேகாலை. |

05-263

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி - மொணறாகலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரரின் வயது, 40 வயதிற்கு குறையாததாக இருத்தல் வேண்டும். என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் அதிகபட்ச வயது 65 வயதாகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் திருமணமானவராக இருத்தல் வேண்டும். என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019, யூன் மாதம் 17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, ஏப்பிறல் 26.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மொணறாகலை | மெதகம | பக்கினிகஹவெல பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மொணறாகலை |

05-264

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - மொணராகலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரரின் வயது 40 இற்கு குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்ட செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019, யூன் மாதம் 17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, ஏப்பிறல் 26.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மொணராகலை | பிபில | நில்கல பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் பிபில பிரிவின் விவாக (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மொணறாகலை. |

05-265

---

## வீடமைப்பு, நிர்மாண மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

இலங்கைத் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

பதவி வெற்றிடம்

இலங்கை தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்தில் வெற்றிடமாகியுள்ள கீழ்வரும் பதவிகளுக்காக இங்கு குறிப்பிடப் பட்டுள்ள கல்வி மற்றும் ஏனைய தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|
| முகாமையாளர் (HM2-1) | 01 |
| பிரதி முகாமையாளர் (HM 1-1) | 02 |

**பதவி** : முகாமையாளர் (HM 2-1)

**தகைமை.**- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் பெற்றுக் கொள்ளப்பட்ட முதல் பட்டமொன்றுடன் பட்டப்பின் பட்டத்துடன் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 10 வருடங்கள் பட்டப்பின் பட்டம் பெற்ற பின்னர் அனுபவம் கொண்டிருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம்.-** முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் 02/2016 (I) HM 2-1 ரூபா 91,645 - 2,700 × 12 - ரூபா 124,045

முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் 02/ 2016 (I) க்கு ஏற்ப ஆரம்ப சம்பளம் II ஆம் அட்டவணைப் பிரகாரம் வழங்கப்படும்.)

**சம்பளம் .-** ரூபா 82,122

**வயதெல்லை.-** 55 வருடங்களுக்குக் கூடாமல் இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்க்கும் விதம்.-** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம்

**பதவியின் தன்மையும் சேவை நிபந்தனையும்.-** அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புக்கான விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

**பதவி.-** பிரதி முகாமையாளர் - செயற்பாடு (HM 1-1)

**தகைமை.-** பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டமொன்றுடன் பதவிசார்ந்த பட்டப்பின் பட்டத்துடன் முதல் பட்டத்தைப் பெற்றதன் பின்னர் அரச கூட்டுத்தாபனமொன்றில், சட்டரீதியான சபையொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 12 வருடங்கள் அனுபவம் கொண்டிருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம்.-** முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் 02/2016 (I) HM 1-1 ரூபா 80,295 - 2,270 × 15 - ரூபா 114,345

முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் 02/2016 (I) க்கு ஏற்ப ஆரம்ப சம்பளம் II ஆம் அட்டவணைப் பிரகாரம் வழங்கப்படும்.)

**சம்பளம் .-** ரூபா 71,942

**வயதெல்லை.-** 55 வருடங்களுக்குக் கூடாமல் இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்க்கும் விதம்.-** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம்

**பதவியின் தன்மையும் சேவை நிபந்தனையும்.-** அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புக்கான விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

2. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் அவசியம் என்பதுடன் விசேட குணநலமுடையவராகவும் இருத்தல் வேண்டும். கீழே கொடுக்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகள் இவ்விண்ணப்பத்தோடு இணைத்தனுப்புதல் வேண்டும்.

1. கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள்;
2. பிறப்புச் சாட்சிப்பத்திரத்தின் பிரதி;
3. அனுபவம் பற்றிய சான்றிதழின் பிரதி.

3. **விண்ணப்பிக்கும் முறை.-**

I. மேற்படி பதவிக்காக தகைமை பெற்றிருக்கும் விண்ணப்பதாரிகள் தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை 2019, யூலை மாதம் 1 ஆந் திகதிக்கு முன்னர், தலைவர், இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனம், இல. 303, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.

II. விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏதேனுமொரு தகவல், பிழையானது என ஆட்சேர்ப்புக்கு முன்னால் அல்லது அதன் பிறகு தெரியவரின், நீங்கள் இந்தப் பதவிக்கு தகுதியற்றவர் என கருதப்படுவீர்கள்.

தலைவர்,
இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனம்,
இல. 303, பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு - 07.

05-359

---

**இலங்கை பொலிஸ்**

திருத்தம்

பொலிஸ் கொஸ்தாபல், பெண் பொலிஸ் கொஸ்தாபல் மற்றும் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவிகள்

2019.03.22 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலக்கம் 2116 கொண்ட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான மேல் குறிப்பிட்ட அறிவித்தலில் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2019.06.22 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சீ. டீ. விக்ரமரத்ன,
பதில் பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01,
2019, மே 14.

05-822

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் புகையிரத திணைக்களத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் உப புகையிரத நிலைய அதிபர்களை சேர்த்துக் கொள்ளல்

இலங்கைப் புகையிரதத் திணைக்களத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் உப புகையிரத நிலைய அதிபர் பதவிகளுக்கு வெற்றிடம் நிலவும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உப புகையிரத நிலையங்களுக்காக வேண்டி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. ரதெல்ல
02. மாவிட்டபுரம்
03. ரனமுக்கம
04. நேகம
05. சியம்பலங்கமுவ
06. ஹத்தரஸ்கொட்டுவ
07. உடுவர
08. பின்வத்த
09. வடக்கு பயாகல
10. பாத்தேகம்கொட
11. மாதம்பாகம
12. ரிச்மன்கந்த
13. மிரிஸ்ஸ
14. லியனகேமுல்ல
15. குடஹகபொல
16. தில்லடிய
17. மங்கலஎலிய
18. வல்பொல
19. கீனவல
20. நயிலிய
21. கிருலபன
22. பெங்கிரிவத்த
23. உடஹமுல்ல
24. நாவின்ன
25. கொடகம
26. உக்கல்ல
27. மொரகெலே
28. வட்டரெக்க
29. பிலதுவ
30. வெஹெரஹேன
31. அனுராதபுரம் புதிய நகரம்

1. **உப புகையிரத நிலைய அதிபர்களின் கடமை விபரம்.**- பிரவேசப் பத்திர விற்பனை நிலையத்திற்கு பொறுப்பாக சேவையில் ஈடுபடுத்தப்படும் பிரதிநிதிகள் அந்தந்த நிலையங்களில் நிறுத்தப்படும் புகையிரதங்களின்படி 24 மணி நேரமும் பிரவேசப்பத்திரம் விற்பனை செய்தல் வேண்டும். பார்சல் கையேற்றல், கிடைக்கும் பார்சல்களை உரியவர்களிடம் ஒப்படைத்தல், தினமும் ஒன்று சேரும் பணத்தை பிரதான புகையிரத கணக்கு உத்தியோகத்தருக்கு அனுப்பி வைத்தல், நிலையத்தை சுத்தமாக வைத்திருத்தல் மற்றும் புகையிரத முகாமையாளரினால் சந்தர்ப்பத்திற்கேற்ப ஒப்படைக்கப்படும் வேறு கடமைகளும் இப்பிரதிநிதிகளின் பொதுவான கடமையாகும்.

2. **கொடுப்பனவு.**- நிரந்தர சேவையாளர் தொகைக்கு உட்படாத பதவியாகும். தேர்ந்தெடுக்கப்படும் நபர்களுக்கு அந்தந்த நிலையத்தின் வருமானத்தை அடிப்படையாக கொண்டு தரகுப் பணமும் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மாத்திரம் வழங்கப்படும். மேலும் ஆரம்ப தரகுப் பணம் ரூபா 310 ஆவதுடன் (குறைந்த தரகுப் பணம் ரூபா 310 இன் படி தரகுப் பணத்தை கணக்கிடும்போது கிடைக்கும் முழு தரகுப் பணம் ரூபா 10,000 க்கு குறைவாயின் ரூபா 10,000 ஆன தரகுப் பணம் கிடைக்கும்) தரகுப் பணத்திற்கு மேலதிகமாக ரூபா 5329 ஆன கொடுப்பனவும் வழங்கப்படும்.

3. **ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.**- ஒரு விண்ணப்பதாரி தனது விண்ணப்பப் பத்திரத்தில் ஒரு நிலையத்தை மாத்திரம் குறிப்பிட்டு விண்ணப்பிக்க வேண்டியதுடன் ஒன்றுக்கு மேல் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் முதலாவது குறிப்பிடப்பட்டுள்ள நிலையத்திற்கு விண்ணப்பித்துள்ளதாக கருதப்படும்.

4. **வயதெல்லை.**- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி தினத்தன்று வயது வருடம் 18 க்கு குறையாமலும் 45 க்கு கூடாமலும் இருத்தல் வேண்டும்.

5. **கல்வித் தரம்.**- க. பொ. த. (சா/ தரப்) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலத்துடன் கணிதம் உட்பட சிறப்பு சித்தி நான்குடன் ஆறு விடயங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

6. **வேறு தகைமைகள்.**-

(i) விண்ணப்பதாரி குறிப்பிட்ட உப புகையிரத நிலையத்திலிருந்து கி. மீ. 20 தூரத்திற்குள் (நேரடி தூரம்) குறைந்தது 05 வருட காலம் நிரந்தர வதிவுடையவராக இருத்தல் வேண்டும். நியமனக் கடிதம் கிடைப்பதற்கு முன்பு இது பற்றி உறுதிப்படுத்தும் பொருட்டு நம்பத்தகுந்த கடிதங்கள் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும். (கிராம அலுவலர் சான்றிதழ், பிரதேச செயலாளரின் சான்றிதழ், தேர்தல் இடாப்பு பிரதி போன்றவையாகும்.) விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்படும் முகவரி நிரந்தர முகவரியாக இருக்க வேண்டியதுடன் புகையிரத நிலையத்திற்குள்ள நேரடி தூரத்தை கணக்கிட வேண்டியது அம்முகவரியில் இருந்தாகும்.

(ii) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(iii) உயரம் 5 அடி 4 அங்குலத்திற்கு குறையாமலும், மார்பளவு 32 அங்குலத்திற்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

(iv) உப புகையிரத நிலைய அதிபராக தற்போது கடமை புரிபவர்களுக்கும் அல்லது அவ்வாறு சேவை செய்து சேவை முடிவுறுத்தப்பட்டவர்களுக்கும் இதற்காக வேண்டி விண்ணப்பிக்க முடியாது.

(v) விண்ணப்பதாரி சிறந்த தேகாரோக்கியமும் சிறந்த கண் பார்வையும் உடையவர் என வைத்திய பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்பே தேர்ந்தெடுக்கப்படுவர். சிறந்த கண்பார்வை உடையவராக இருப்பது கட்டாயமாகும்.

7. **தேர்ந்தெடுக்கப்படும் முறை**.- புகையிரத முகாமையாளரினால் நடாத்தப்படும் எழுத்துமூல போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் திறமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர். போட்டிப் பரீட்சையின் போது சகல விண்ணப்பதாரிகளும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் கீழ் இரு கேள்வித் தாள்களுக்கு விடையளித்தல் வேண்டும். பரீட்சையில் தகுதி பெறுவதற்காக வேண்டி ஒவ்வொரு விடயத்திலும் 40% வீத புள்ளிகளை பெறல் வேண்டும்.

(i) மொழித்தேர்ச்சி.- காலம் 01 மணி - முழுப்புள்ளி 100 ஆகும்.

விளங்கிக் கொள்ளுதலுடன், சரியான மொழி நடையை பிரயோகித்தல் சம்பந்தமாக விடயத்துடன் தொடர்புடைய கேள்விகளை உள்ளடக்கிய கேள்வித்தாளாகும்.

(ii) நுண்ணறிவு :- காலம் 01 மணி - முழுப் புள்ளி 100 ஆகும்.

கேள்வித் தாளிலேயே விடை எழுத வேண்டிய கணித குளறுபாடு, மொழித் தொகுதி, அட்டவணை, பொருந்திப் பார்த்தல் குறிப்பு, படம், வரைபு போன்றவற்றின் உதவியுடன் தர்க்க ரீதியாக சரியான உடனடி தீர்மானம் எடுக்கும் சிறந்த ஆற்றலை பரிசீலனை செய்யும் பல்தெரிவிலான கேள்வித்தாளாகும்.

**குறிப்பு** :

(i) போட்டிப் பரீட்சையில் தகுதி பெற்றவர்கள் மத்தியில் அந்தந்த பிரவேச பத்திர விற்பனை நிலையத்தின் படி கூடிய புள்ளிகளை பெற்ற விண்ணப்பதாரி குறிப்பிட்ட பிரவேசப்பத்திர விற்பனை நிலையத்திற்கு நியமிப்பதற்காக வேண்டி தகுதிகளை ஆராயும் பொருட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்.

(ii) நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் ஏதும் வழங்கப்படமாட்டாது.

(iii) தகுதி பெற்றவர்கள் சமமான புள்ளிகளை பெற்றிருப்பின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் புகையிரத பிரவேச பத்திர விற்பனை முகவரிடம் அல்லது உப புகையிரத நிலைய அதிபரின் கீழ் அனுமதிக்கப்பட்ட பதிலீட்டாளராக சேவை செய்துள்ள விண்ணப்பதாரிக்கு முதலிடம் வழங்கப்படும். அவ்வாறில்லாவிடின் குறிப்பிட்ட உப புகையிரத நிலையத்திலிருந்து மிகவும் கிட்டிய தூரத்தில் வசிப்பவர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

8. **சேவையில் ஈடுபடுத்தும் நிபந்தனை**.-

(i) தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் புகையிரத முகாமையாளரினால் தீர்மானிக்கும் படி அல்லது குறைந்தது ரூபா 25,000 ஆன தொகை பாதுகாப்பு பிணைப் பணமாக புகையிரத முகாமையாளரின் பெயருக்கு வைப்புச் செய்யப்படல் வேண்டியதுடன் புகையிரத முகாமையாளருடன் கையொப்பமிடும் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படியும் கடமை மேற்கொள்ளல் வேண்டும். அவ் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை மீறுதல் சேவையை முடிவுறுத்துவதற்கு காரணமாக அமையும்.

(ii) இது ஒப்பந்த அடிப்படையிலானதுடன் வருடத்திற்கு வருடம் இவ் ஒப்பந்தம் புதுப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு புதுப்பிக்கப்படாத விடத்து ஒப்பந்தம் முடிவு பெறும்.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி தான் நியமிக்கப்படவுள்ள நிலையத்தின் கடமைகள் பற்றி தெரிந்து கொள்வதற்காக வேண்டி புகையிரத முகாமையாளரினால் கூறப்படும் புகையிரத நிலையத்தில் 14 நாட்கள் பயிற்சியை பெறல் வேண்டும். இப்பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவுகள் ஏதும் வழங்கப்படமாட்டாது.

(iv) தனக்குப் பதிலாக உதவிக்காக வேலை செய்வதற்கு புகையிரத திணைக்களத்தின் அனுமதியுடன் உதவியாளர் ஒருவரை அனுமதித்துக் கொள்ள முடிவதுடன் உதவியாளருக்காக எவ்வித கொடுப்பனவும் திணைக்களத்தினால் வழங்கப்படமாட்டாது. நிலையத்தின் முழு பொறுப்பும் உப புகையிரத நிலைய அதிபரையே சாரும்.

(v) பயிற்சியை பெறும் காலவெல்லைக்குள் அல்லது உப புகையிரத நிலைய அதிபராக கடமையாற்றும் காலவெல்லைக்குள் அல்லது நேர்முகப் பரீட்சையின் போது அல்லது வேறு ஏதேனும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியினால் / அவருக்காக தரப்பட்டுள்ள/ வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பிழையானதெனவும் அங்கீகாரம் அற்றதெனவும் தெரியவருமிடத்து எவ் அறிவித்தலுமின்றியும் நஷ்டயீடுகள் எதுவுமின்றியும் உடனடியாக அவரின் சேவையை பெறல் முடிவுறுத்தப்படும்.

(vi) உப புகையிரத நிலைய அதிபராக தேர்ந்தெடுக்கப்படுபவர் அத்தேர்ந்தெடுப்பு மூலம் புகையிரத திணைக்களத்தில் எந்த நிரந்தர பதவியையும் வழங்குவதற்கு திணைக்களம் பொறுப்புடையதல்ல.

9. **சேவை நிபந்தனை :**

(i) கையொப்பமிடும் ஒப்பந்தத்தில் ஏதேனும் நிபந்தனை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிபந்தனைகள் மீறப்படும் சந்தர்ப்பத்தில் அவரின் நியமனம் முடிவுறுத்தப்படும்.

(ii) புகையிரத முகாமையாளரினால் காலத்திற்கு காலம் இடப்படும் நிபந்தனைகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் கீழ்ப் படிவதற்கு இணங்குதல் வேண்டும்.

10. **பரீட்சைக் கட்டணம்.**- சகல விண்ணப்பதாரிகளும் மீண்டும் வழங்கப்படாத ரூபா 500 ஆன தொகை பரீட்சைக் கட்டணமாக புகையிரத பொது முகாமையாளர் எனும் பெயருக்கு மக்கள் வங்கி, நகர மத்திய கிளை கணக்கு இலக்கம் 176100129027313 க்கு வரவிலிட்டு பெறப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். வேறு விதங்களில் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாக அமையும். பூரணமற்றதும், முறையற்றதுமான விண்ணப்பப்படிவங்கள் யாவும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும்.

11. **விண்ணப்பப்படிவம் முன்வைத்தல்.**- தட்டச்சு கடதாசி அளவுள்ள (ஏ-4) கடதாசியில் விண்ணப்பதாரியினாலேயே விண்ணப்பப்பத்திரம் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உப புகையிரத நிலைய அதிபர் பதவிக்கான விண்ணப்பப் படிவம் என குறிப்பிட்டு புகையிரத முகாமையாளர் த. பெ. இலக்கம் 355, புகையிரத முகாமையாளர் அலுவலகம், கொழும்பு - 10 எனும் முகவரிக்கு 2019.06.18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். (மாதிரி விண்ணப்பப்படிவம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.)

12. **விண்ணப்பப் பத்திரத்தை உறுதிப்படுத்தல்.**- விண்ணப்பப் பத்திரத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப்பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்/ அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர்/ அல்லது வருடத்திற்கு ரூபா 237,060 க்கு குறையாத ஒன்றிணைந்த சம்பளத்தைப் பெறும் அரசாங்க சேவையில் நிரந்தர பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

எம். ஜே. எம். பெர்னாந்து,
புகையிரத முகாமையாளர்.

புகையிரத முகாமையாளர் காரியாலயம்,
கொழும்பு - 10,
2019, ஏப்பிறல் 30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் புகையிரதத் திணைக்களத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் உப புகையிரத நிலைய அதிபர்களை சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை**

| | |
|---|---|
| விண்ணப்பிக்கும் உப புகையிரத நிலையம் | முதலாவது தெரிவு :-----. |
| (சிங்களத்தில்/ தமிழில்) | இரண்டாவது தெரிவு :-----. |
| | மூன்றாவது தெரிவு :-----. |
| விண்ணப்பிக்கும் உப புகையிரத நிலையம் | முதலாவது தெரிவு :-----. |
| (ஆங்கிலத்தில்) | இரண்டாவது தெரிவு :-----. |
| | மூன்றாவது தெரிவு :-----. |

1.
(i) முழுப்பெயர் : (சிங்களத்தில்/ தமிழில்) :-----.
(ii) முழுப்பெயர் : (ஆங்கிலத்தில்) :-----.
(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் : (சிங்களத்தில்/ தமிழில்) :-----.
(iv) முதலெழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கிலத்தில்) :-----.

2. நிரந்தர முகவரி :-

(i) சிங்களத்தில்/ தமிழில் :-----.
(ii) ஆங்கிலத்தில் :-----.
(iii) தொலைபேசி இலக்கம் (வீடு) :-----. கையடக்க :-----.

3.

(i) பிறந்த திகதி :- 2019.06.18 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் [ ] மாதங்கள் [ ] நாட்கள் [ ]
(விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி தினத்தன்று)
(ii) உயரம் :-----.
(iii) நெஞ்சளவு :-----.

4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

5. மாவட்டம் (சிங்களத்தில்/ தமிழில்) [ ] ஆங்கிலத்தில் [ ]

6. பிரதேச செயலாளர் பிரிவு (சிங்களத்தில்/ தமிழில்) [ ] கிராம சேவையாளர் பிரிவு (சிங்களத்தில்/ தமிழில்) [ ]

ஆங்கிலத்தில் [ ] ஆங்கிலத்தில் [ ]

7. உமது நிரந்தர வசிப்பிடத்திலிருந்து நீர் விண்ணப்பிக்கும் உப புகையிரத நிலையத்திற்குள்ள தூரம் (நேரடி தூரம்) கி. மீ. மூலம் குறிப்பிடவும் :-----.

| உப புகையிரத நிலையம் | தூர அளவு (கி. மீ.) |
|---|---|
| | |
| | |
| | |

8. கல்வித் தகைமை : க. பொ. த. (சா. தரம்)

| வருடமும் - சுட்டெண்ணும் | விடயங்கள் | பெறுபேறுகள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

9. வேறு தகைமைகள் :-----.

10. பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :- (சிங்களம்/ தமிழ்)

11. நீர் ஏதாவது குற்றம் காரணமாக நீதிமன்றம் மூலம் குற்றவாளியாக கருதப்பட்டிருப்பின் விபரம் தருக :-----.

12. ........... ஆந் திகதி மக்கள் வங்கியின் ........... கிளைக்கு ரூபா 500 ஐ செலுத்தி பெற்றுக்கொண்ட பண வரவு பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை இணைத்து அனுப்புகிறேன்.

(வேறு வழிகள் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் விண்ணப்பப்பத்திரத்தை நிராகரிப்பதற்கு காரணமாக அமையும்.)

13. விண்ணப்பதாரியின் உறுதியுரை :-

(அ) இவ் விண்ணப்பப்பத்திரத்தில் தன்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானதெனவும் சரியானதெனவும் உறுதிப்படுத்துகிறேன்.

(ஆ) தன்னால் வழங்கப்பட்டுள்ள இத் தகவல்கள் பொய்யானதெனவும் பிழையானதெனவும் தான் நியமிக் கப்படுவதற்கு முன்பு கண்டுபிடிக்கப்படுமிடத்து நான் தகுதியற்றவராக கருதப்படுவதுடன் நியமனம் பெறப்பட்ட பிறகு கண்டுபிடிக்கப்படுமிடத்து தனது சேவையை முடிவுறுத்துவதற்கு நான் கீழ் படிவதாகவும் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

14. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பப்பத்திரத்தை முன்வைக்கும் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் .................. ஐ உடைய திரு. ......................... என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் என்றும் அவர் இன்று என் முன்னிலையில் அவரின் கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

-----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.
(இறப்பர் இலச்சினையைப் பொறிக்கவும்.)

05-277

---

## இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் புகையிரத பாதுகாவலர் சேவையில் புகையிரத பாதுகாவலர் (ஆண்) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018 (2019)

அரசாங்க ஆணைக்குழு செயலாளரின் இல. PSC/ EST/ 04-03/ 43/ 2015 மற்றும் 2018.08.20 ஆந் திகதியினை உடைய கடிதத்தில் கிடைக்க பெற்ற அனுமதியினை கொண்டு இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் புகையிரத பாதுகாவலர் சேவையில் புகையிரத பாதுகாவலர் (ஆண்) பதவிக்கு 180 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காக தகைமை பெற்ற இலங்கை குடியுரிமையுடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் புகையிரத பாதுகாவலர் சேவையில் புகையிரத பாதுகாவலர் (ஆண்) பதவிக்கு ஆட்சேர்ப்பானது இப்பரீட்சையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

02. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2019.06.18 ஆந் திகதி ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அதனுடன் கடிதம் தபாலின் போது தொலைந்தது அல்லது தாமதமடைந்ததாகக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் பற்றி கவனத்திற் கொள்ளப்படுவதில்லை. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களைத் தாமதப்படுத்தலினால் ஏற்படும் நட்டங்களை விண்ணப்பதாரியே பொறுப்பேற்றுக் கொள்ளல் வேண்டும்.

*எழுத்துப் பரீட்சை*.- இப்பரீட்சையானது பின்வரும் இரண்டு (2) வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். மேலும் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிப்பிரிவின் கீழ் இடம்பெறும். தங்களது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்ட மொழியினை பின்னர் மாற்றம் செய்ய இயலாது.

(1) நுண்ணறிவுப் பரீட்சை;
(2) மொழித்திறன் மற்றும் கட்டுரை.

*பரீட்சைத் திகதி மற்றும் இடம்*.- கொழும்பில் அமைந்துள்ள பரீட்சை நிலையங்களில் மாத்திரம் இடம்பெறும். இப்பரீட்சையினை தாமதப்படுத்தல் மற்றும் இடை நிறுத்துதல் ஆகியவற்றிற்கு புகையிரத பொது முகாமையாளருக்கு உரிமையுண்டு.

*நேர்முகப் பரீட்சை*.- எழுத்துப் பரீட்சையில் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கிடையில் புகையிரத பொது முகாயைமாளரால் விதிக்கப்படும் ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெறுகின்ற பரீட்சார்த்திகளுக்காக பொது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் திகதியை புகையிரத பொது முகாமையாளரின் ஆலோசனைக்கமைய செயலாளர் தீர்மானிப்பார்.

02. நியமிக்கப்படவுள்ள ஆட்களின் எண்ணிக்கை 180 ஆகும். வெற்றிட எண்ணிக்கைக்கு மேல், இறுதி வெற்றிடம் அல்லது இறுதியான சில வெற்றிடங்களுக்காக சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் காணப்படும் நிலைமைகளில் அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கான தீர்மானமானது நடைமுறை விதிகளின் பிரிவு 80 இற்கமைய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் எடுக்கப்படல் வேண்டும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

03. **சேவை நிபந்தனைகள்**.-

3.1 அரசாங்க சேவையில் உள்ள நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கு உட்படும், ஸ்தாபன இயக்குநரின் 2001.04.11 ஆந் திகதி ஆ IX 814ஈ 282/ 91 (4) ஆம் இலக்க ஆட்சேர்ப்புப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் திருத்தங்கள் அல்லது அதன் அடுத்து மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்கள், தாபன விதிக் கோவையின் நிதிப் பிரமாணங்கள், 2009.02.20 ஆந் திகதிய 1589/ 30 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் என்பவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் புகையிரத பாதுகாவலர் (ஆண்) பதவிக்கு நியமிக்கப்படுவார்.

3.2 இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

3.3 நியமனமானது ஒரு வருட தகுதி காண் காலப்பகுதி ஒன்றிற்கு உட்பட்டதாகும். இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் புகையிரத பாதுகாவலர் சேவையில் புகையிரத பாதுகாவலர் (ஆண்) பதவிக்கு ஆட்சேர்ப்பானது நியமனம் பெற்ற திகதியிலிருந்து 3 வருடத்திற்குள் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியெய்த வேண்டும்.

3.4 பொது நிர்வாகச் சுற்றறிக்கை 01/ 2014 மற்றும் தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் ஆகியவற்றிற்கு இணங்க சேவையில் இணைந்து 5 வருடத்திற்குள் குறித்து உரைக்கப்பட்ட அரச கரும மொழித் தேர்ச்சியானது பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

3.5 நியமிக்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறுகின்ற மற்றும்/ அல்லது தான் நியமிக்கப்படும் பிரதேசம் ஒன்றில் சேவையாற்ற மறுக்கின்ற அல்லது தவிர்க்கின்ற ஏதேனும் பரீட்சார்த்தியின் நியமனத்தினை இரத்துச்செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

04. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**.- 03/ 2016 ஆம் இலக்க 2016.02.25 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் உப அட்டவணை I இன்படி இப்பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பள அளவுத் திட்டம்

ரூபா 29,540-7 × 300 - 27 × 370 - ரூபா 41,630 (RS-1-2016) ஆகும். இச்சம்பளம் குறித்த சுற்றறிக்கையின் உப அட்டவணை II இன் சட்டதிட்டங்களின் படியே வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக அரச அலுவலர்களுக்கு அரசினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் வேறு படிகளும் உங்களுக்கு உரித்தாகும்.

05. **ஆட்சேர்ப்பதற்கான தகுதி.-**

(அ) (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) உயரம் 05 அடி 06 அங்குலமாக இருக்க வேண்டும். (காலணிகள் இன்றி)
(iii) பார்வைத்திறன்: மூக்குக் கண்ணாடி இன்றி ஏ 2 பார்வைத்திறன் கொண்டிருக்க வேண்டும். (இது எல். பீ. 29 கண் பரிசோதனைக்கு உட்பட்டது.)
(iv) மார்பகச் சுற்றளவு 32 அங்குலமாக இருத்தல் வேண்டும்.
(v) திருமணமாகாதவராக, தபுதாரனாக அல்லது திருமணத்தின் பின்னர் சட்டபூர்வமான விடுதலையை பெற்ற ஆணாக இருத்தல் வேண்டும்.

(ஆ) ***கல்வித் தகைமைகள்.-***
(i) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி மற்றும் கணிதம் உட்பட்ட இரண்டு (02) திறமை சித்திகளுடன் ஆறு பாடங்களில் (06) இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

(இ) ***வயது.-***
தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய இறுதித் திகதியன்று பதினெட்டு (18) வயதிற்கு குறையாதிருப்பதோடு நாற்பது (40) வயதுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும். (அதனடிப்படையில் 2001.06.18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1979.06.18 ஆந் திகதி அல்லது அதற்கு பின்னர் பிறந்தவர்கள் மாத்திரமே இப்பதவிக்காக விண்ணப்பிக்கலாம்.

(ஈ) ***வேறு.-***
(i) இப்பதவிக்கு இணைத்துக் கொள்வதற்காக தேவைப்படும் தகைமைகள் அனைத்தும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்யக்கூடிய தேக ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(iv) யாதேனுமோர் மதப் போதகராக பதவி வகிக்கும் எந்தவொரு நபருக்கும் இப்போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்கு அல்லது தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

06. **பரீட்சைக் கட்டணம்.-** பரீட்சைக் கட்டணம் ரூபா 600 ஆகும். விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சை திணைக்கள ஆணையாளரின் வரவு இல. 20-03-02-13 அடிப்படையில் அரசாங்க ஆதாயத்திற்கு வரவாகுமாறு நாடெங்கும் உள்ள எந்தவொரு தபாலகம்/ உபதபாலகத்திற்கு பணத்தினை செலுத்தி பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட கூட்டினுள் கழறாதவாறு ஒட்டிவிடவும். பரீட்சைக் கட்டணமாக ரசீது அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கு செலுத்தப்படும் பணம் எச்சந்தர்ப்பத்திலும் திருப்பித் தரப்படமாட்டாது. மேலும், வேறு பரீட்சைக்காக மாற்றம் செய்யப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தம்மிடம் வைத்திருப்பது நன்று.

07. **விண்ணப்பிக்கும் முறை.-**

(அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவ உருவில் அமைய வேண்டும் என்பதுடன் அது ஏ4 (A4) அளவுடைய ஒரு தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறு தயாரித்த விண்ணப்பம் பரீட்சார்த்தியின் கையெழுத்திலேயே பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். இதற்காக கணினி மூலம் அல்லது தட்டச்சு இயந்திரம் மூலம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பாவிக்க முடியும் 1.0 தொடக்கம் 2.10 வரையிலான கூடுகள் விண்ணப்பத்தில் முதலாம் பக்கத்திலும் 3.0 தொடக்கம் 5.0 வரையிலான கூடுகள் அதன் மறு பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் தமது விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். இப்படிவங்கள் கணினி அல்லது தட்டச்சின் மூலம் தயாரிக்கப்பட்டவையாகவும் இருக்கலாம் என்பதை விசேடமாகக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் தங்கள்

கையெழுத்தில் தெளிவாக நிரப்பப்படல் வேண்டுவதோடு மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமையாத விண்ணப்பங்களும் முழுமை பெறாதவாறு தகவல்களைக் குறிப்பிட்டுள்ள விண்ணப்பங்களும் அறிவிப்புகள் ஏதுமின்றி நிராகரிக்கப்படுவதனால், விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதா என்பதனையும் மற்றும் அனைத்து தகவல்களையும் உள்ளடக்கி விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதனையும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் கழறாதவாறு ஒட்டப்பட்டுள்ளதா என்பதனையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி மற்றும் பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

(ஆ) விண்ணப்பதாரி எம் மொழியில் பரீட்சைக்குத் தோற்ற விரும்புகிறாரோ அம்மொழி மூலத்தில் தம் கையெழுத்தில் விண்ணப்பம் பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் உரிய மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரிகளினால் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் 2019.06.18 ஆந் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரியினை அடையக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் புகையிரத பாதுகாவலர் சேவையில் புகையிரத பாதுகாவலர் (ஆண்) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018 (2019)" என தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

"பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு,
ஒழுங்கமைப்பு (திணைக்கள மற்றும் வெளிநாட்டுப் பரீட்சை) கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. இல. - 1503,
கொழும்பு"

(ஈ) விண்ணப்பப்படிவம் மற்றும் அனுமதி அட்டை இரண்டிலும் பரீட்சார்த்தியின் கையொப்பமானது அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர், அரச நிரந்தரப் பதவி வகிக்கும் பதவி நிலை உத்தியோகத்தர் ஆகிய யாரேனும் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(உ) எல்லா வகையிலும் நிறைவு பெற்றிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம். விண்ணப்பம் அஞ்சலில் தொலைந்துவிட்டமை அல்லது தாமதித்தமை பற்றிய முறைப்பாடுகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(ஊ) விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என்பது பற்றி தெரிவிக்கப்படமாட்டாது.

விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டுள்ளது என்பதனை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பத்திரிகை மற்றும் இணையத்தளத்தின் மூலமாக தெரிவிக்கப்படும். பத்திரிகை மூலமாக தெரிவிக்கப்பட்ட அத்தினத்திலிருந்து இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் விண்ணப்பதாரிக்கு அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாவிடின் பத்திரிகையில் கூறப்பட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்படல் வேண்டும். பரீட்சைத் திணைக்களத்திற்கு தெரிவிக்கும்போது பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், விலாசம் மற்றும் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை சரியாக குறிப்பிட வேண்டும். கொழும்புப் பிரதேசத்தை தவிர்ந்த விண்ணப்பதாரிகளின் தகவல்களை பெக்ஸ் மூலம் அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்கு விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கத்தை குறித்து கடிதத்துடன் பெக்ஸ் மூலமாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பது சிறந்ததாகும். மேலும் பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்டுக் கொள்ளப்பட்ட அனைத்து தகவல்களும் உண்மை எனக்கொள்ள உங்களிடம் இருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பப்பட்டதற்கான பற்றுச்சீட்டின் பிரதிகளை தயார் நிலையில் வைத்திருப்பது சிறந்தது.

08. **பரீட்சைக்கு அனுமதித்தல்.-**

(அ) வர்த்தமானி பத்திரிகையில் உள்ளவாறு தகுதியுடையவர் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார் என்பதை கொண்டும் விளம்பரத்தில் கூறியவாறு வயதெல்லையினை உடைய, விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று மற்றும் அத்தினத்திற்கு முன் குறிப்பிடப்பட்ட பரீட்சைக்கட்டணம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியான

முறையில் பூரணப்படுத்தி அமைக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள யாவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை அனுப்புவார். தனது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) விண்ணப்பதாரி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்காகத் தோற்றுதல் வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் குறித்த பரீட்சை மண்டபத்திற்கான அனுமதிப் பத்திரம், பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் தமது கையொப்பத்தை முன்கூட்டியே உறுதிப்படுத்திய அனுமதிப் பத்திரங்களைப் பரீட்சைக்குத் தோற்றும் முதலாம் நாளில் மண்டப மேற்பார்வையாளருக்கு கையளிக்க வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் கையாள வேண்டிய விதிக்கோவை ஒன்று இவ் வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் வெளியிடப்படுகின்றது. பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்ட விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாதல் வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டமை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளையும் உடையவர் என்பதற்காகும் மற்றும் அவர் பதவிக்கு தகுதியானவர் என்பதாக ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதனமாக கொள்ளவியலாது.

09. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்**.- விண்ணப்பதாரிகள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும் அதற்காக பின்வருவனவற்றுள் ஆளடையாள ஆவணங்களில் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(இ) செல்லுபடியாகும் சாரதி அடையாள அட்டை.

10. **பிழையான தகவல்கள் அளிப்பதற்கான தண்டனை**.- விண்ணப்பத்தினை பூரணப்படுத்தும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சையின் விதி முறைக்கமைய யாதேனும் ஒரு விண்ணப்பதாரிக்கு தகுதியற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

11. இவ்வறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயமானது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறுவுறுத்தல்களுக்குட்பட்டு செயலாளரினால் வரையறுக்கப்பட்டவாறு கையாளப்படல் வேண்டும்.

12. **பரீட்சைத் திட்டம் மற்றும் பரீட்சை மொழி ஊடகம்**.-

(அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.
(ஆ) விண்ணப்பதாரி பரீட்சைக்கு தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரச மொழிகளில் ஒன்றில் மாத்திரமே அமர்த்தப்படுவார்.

**குறிப்பு** :

(i) மேற்கூறப்பட்ட (ஆ) குறிப்பிட்ட தகுதியானது 05. (ஆ) வில் குறிப்பிட்ட கல்வித் தகுதிகள் ஆகும்.
(ii) விண்ணப்பதாரி ஒருவர் ஒரே மொழியில் பரீட்சையின் சகல வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.
(iii) விண்ணப்பப்படிவத்தில் சுட்டிக் காட்டப்பட்ட மொழியினை மாற்றுவதற்கு விண்ணப்பதாரிக்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது.

13. **ஆட்சேர்ப்பு முறை** :

13.1 **எழுத்துமூலப் பரீட்சை**.- பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய எழுத்து மூலப் பரீட்சைத் தாள்கள் இரண்டினை (02) உள்ளடக்கியிருக்கும். பாடங்கள் மற்றும் ஒவ்வொரு பாடத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள வேண்டிய குறைந்த பட்சப் புள்ளிகள் என்பன பின்வருமாறு :

| பாடம் | புள்ளிகள் | குறைந்தபட்ச சித்தியெய்தல் புள்ளிகள் |
|---|---|---|
| 01. நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 50 |
| 02. மொழித்திறன் மற்றும் கட்டுரை | 100 | 50 |

பரீட்சார்த்திகள் சகல வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

13.2 **பொது நேர்முகப் பரீட்சை.-**

(1) எழுத்துப் பரீட்சையில் பாடம் இரண்டில் ஒவ்வொரு பாடத்திற்கு வெவ்வேறாக பாடத்திற்கும் 50% அல்லது அதற்கு மேலாக புள்ளிகள் பெற்று தகுதியினை உடைய விண்ணப்பதாரிகள் அதிகூடிய திறமையின் அடிப்படையில் அவசியமான எண்ணிக்கையினை நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சையின் புள்ளிகளின் கூட்டுத்தொகையில் அதிகூடிய புள்ளிகளை பெற்ற பரீட்சார்த்தி பதவிக்கு இணைத்துக்கொள்ளப்படுவர்.

புகையிரத பொது முகாமையாளரால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சை செயற்குழுவினால் பின்வரும் பிரகடனத்தினை கொண்டு விதிமுறைக்கமைவான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அதன் புள்ளிகள் 50 ஆகும்.

| இல. | அடிப்படை | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | மொழித்திறன் | 10 |
| 02 | மேலதிக கல்வித் தகுதிகள் | 20 |
| 03 | விளையாட்டு பயிற்சி | 15 |
| 04 | ஆளுமை | 05 |
| | மொத்த புள்ளிகள் | 50 |

13.3 அதன் விரிவான புள்ளிகள் வழங்கப்படும் விதம் பிரகடனத்தில் கீழ்க்காணும் வகையில் அமையும்.

(i) *மொழித்திறன்*
இப்போட்டிப் பரீட்சையில் அமர்வதற்கு பெறும் மேற்கூறப்பட்ட இல. 05 இல் (ஆ) வின் கீழ்க் குறிப்பிடப்பட்ட மொழிதவிர்ந்த அதில் கூறப்பட்ட வேறு ஒரு மொழிப் பிரிவு தொடர்பாக விண்ணப்பதாரியினால் நேர்முகப் பரீட்சையின் போது முன்வைக்கப்படும் சான்றிதழ் தொடர்பாக குறித்த ஒரு மொழிக்கு 05 புள்ளிகள் வீதம் இரண்டு மொழிக்கு 10 புள்ளிகள் வழங்கப்படும்.

(ii) *மேலதிக கல்வித்தகைமைகள்.-* குறித்த கல்வித்தகைமையினை விட மேலதிக கல்வித்தகைமை பெற்றிருப்பின் அதற்கான புள்ளிகள் 20 ஆகும்.

1. ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் விஷேட பட்டத்தினை பெற்றிருத்தல் — 20 புள்ளிகள்
2. ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் சாதாரண பட்டத்தினை பெற்றிருத்தல் — 15 புள்ளிகள்
3. அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தினால் பெற்றுக்கொண்ட டிப்ளோமா சான்றிதழ் — 10 புள்ளிகள்
4. க. பொ. த. (உ./ த.) பரீட்சையில் 03 பாடத்திலும் சித்திபெற்றிருத்தல் — 05 புள்ளிகள்

(iii) *விளையாட்டுப் பயிற்சி.-* கிரிகெட், றகர், பொக்சிங் (குத்துச்சண்டை), ஜிம்னாஸ்டிக் போன்ற விளையாட்டுக்களில் பங்குபற்றியமைக்கான சான்றிதழ்கள் இருப்பின் அல்லது பயிற்சிகள் தொடர்பாக சான்றிதழ்கள் இருப்பின் இவ்விரண்டில் ஒன்றிற்கு மாத்திரம் அதிகூடிய புள்ளியாக 15 புள்ளிகள் வழங்கப்படும்.

தேசிய மட்டத்தில் முதலாம் இடம் - 15 புள்ளிகள்
மாவட்ட மட்டத்தில் முதலாம் இடம் - 12 புள்ளிகள்
பாடசாலைமட்டத்தில் முதலாம் இடம் - 10 புள்ளிகள்
வேறு சான்றிதழ்கள் - 05 புள்ளிகள்

இரண்டாம் மற்றும் மூன்றாம் இடம் பெற்றிருப்பின் அதற்கமைய புள்ளிகள் வழங்கப்படும்.

(iv) *ஆளுமை.-* ஆளுமைக்கு 05 புள்ளிகள் வழங்கப்படும்.

**கவனிக்க வேண்டியது.-** நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்வதனால் நியமனம் வழங்கப்படுவதற்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

13.4 பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் அறிவிக்க பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபால் மூலம் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தள முகவரியின் மூலம் வெளியிடப்படும்.

14. **எழுத்துப் பரீட்சைப் பாடத்திட்டம்**.-

(1) **நுண்ணறிவுப் பரீட்சை**.- தர்க்க விவேகம், பொருள்கோடல் திறன் என்பவற்றை ஏனையவற்றுடன் தொடர்புபடுத்தும் ஆற்றல் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்வது தொடர்பாக பரீட்சார்த்தியிடம் காணப்படும் உளச்சார்பு மட்டத்தினை அளவிடுதல் பல்தேர்வு கொடுக்கப்படும் வினாத்தாளிலேயே அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதப்படல் வேண்டும். (நேரம் : 1 மணித்தியாலங்கள்)

(2) மொழித்திறன்.- சரியான மற்றும் தெளிவான கருத்தினை வெளிப்படுத்தும் ஆற்றல், அறிக்கைப்படுத்தும் திறன், சரியான இலக்கண அறிவை பயன்படுத்தல், புரிந்து கொள்ளும் திறன் மற்றும் அலுவலக கோவைகளை நடைமுறைப்படுத்தும் முறையினை அறிந்திருத்தலுடன் அதற்கான சுருக்க பதிலையும் அறிந்திருத்தல். கட்டுரை வினாக்களாக அமையப்பெற்றது. (காலம் : 02 மணித்தியாலங்கள்)

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இப்பிரசுரத்தில் மொழிகளுக்கிடையில் வேறுபாடு இருப்பின் அல்லது மூன்றிற்கும் இடையில் தொடர்பில்லா தன்மை காணப்படின் சிங்களத்தில் பிரசுரிக்கப்படும் கெசட் விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளவும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எம். ஜே. டீ. பிரனாந்து,
புகையிரத பொதுமுகாமையாளர்.

புகையிரத பொது முகாமையாளர்,
இலங்கை புகையிரத திணைக்களம்,
த. பெ. இ. 355,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு - 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

**இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் புகையிரத பாதுகாவலர் சேவையில் புகையிரத பாதுகாவலர் (ஆண்) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018**

Open Competitive Examination For Recruitment to the Post of Railway Arakshaka (Male) in the Railway Security Service in the Sri Lanka Railway Department - 2018

பரீட்சை மொழி ஊடகம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற உத்தேசித்துள்ள மொழி ஊடகத்தில் விண்ணப்பமானது நிரப்பப்படல் வேண்டும்.

2.0 தனிப்பட்ட தகவல்கள் :

2.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :------.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

2.2 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
(உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.)

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :-----.

2.4 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : (அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பப்படும்) :-----.

2.5 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :-----.

2.6 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

2.7 விவாக நிலை : (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)
விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2 | |

2.8 பிறந்த திகதி
ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

2.9 2019.06.18 ஆந் தினத்தன்று வயது :
வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

2.10 தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

3.0 கல்வித் தகைமைகள் :
க.பொ.த. (சா/த.):
முதலாம் அமர்வு :
வருடம் : பரீட்சை இல. :

| | பாடம் | சித்திகள் | | பாடம் | சித்திகள் |
|---|---|---|---|---|---|
| 01 | | | 06 | | |
| 02 | | | 07 | | |
| 03 | | | 08 | | |
| 04 | | | 09 | | |
| 05 | | | 10 | | |

இரண்டாம் அமர்வு :
வருடம் : பரீட்சை இல. :

| | பாடம் | சித்திகள் | | பாடம் | சித்திகள் |
|---|---|---|---|---|---|
| 01 | | | 06 | | |
| 02 | | | 07 | | |
| 03 | | | 08 | | |
| 04 | | | 09 | | |
| 05 | | | 10 | | |

4.0 பரீட்சைக் கட்டணத்தை செலுத்துதல் :
பரீட்சைக் கட்டணம் :
(i) செலுத்தும் இடம் :-----.
(ii) செலுத்தப்பட்ட பணம் :-----.
(iii) பற்றுச்சீட்டு இல. :-----.
(iv) செலுத்தப்பட்ட திகதி :-----.

(விளிம்பிலிருந்து இறுக்கமாக பணப்பற்றுச்சீட்டினை (மூலப்பிரதி) ஒட்டவும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்திருக்கவும்.)

5. பரீட்சார்த்தியின் சான்றுரை :-----.

வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட சகல விதிகளுக்கும், ஒழுங்குவிதிகளுக்கும் அமைய இத் திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு தகுதியுள்ளது என்றும் எனது அறிவுக்கு எட்டியவரை இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ............... ஆந் திகதிய ................. ஆம் இலக்கப் பற்றுச்சீட்டினை இதில் ஒட்டியுள்ளேன் என்றும் நான் பிரகடனம் செய்கின்றேன். இப்பரீட்சையின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்படுவதற்கும் இப்பரீட்சையின் பிரமாணக் குறிப்புக்கு இணங்க நான் தகுதியற்ற ஒருவர் எனத் தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின் போது அல்லது பரீட்சைக்கு பின்னர் எனது பரீட்சார்த்தி உரிமையை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படும் எத்தகையதுமான தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன். மேலும், இப்பரீட்சையினை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் நான் கட்டுப்படுவேன் என்றும் பிரகடனம் செய்கின்றேன்.

------,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :-----.

6. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :
(வர்த்தமானி அறிவித்தலின் 7 (ஈ) இன் பிரகாரம் இருத்தல் வேண்டும்.)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற ............ (முழுப்பெயர்) என்பவர் எனக்கு நன்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் ................. ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

-----,
கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :----.

கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின்
முழுப்பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்.)

7. திணைக்களத் தலைவரின் சான்றுரை : (மத்திய அரசு/ மாகாண அரசு/ மாவட்ட அரசில் பணியில் புரியும் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம்) :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு. ................ எமது திணைக்களத்தில்/ அமைச்சில்/ அலுவலகத்தில் ........................ என்ற பதவியில் சேவையாற்றுகின்றார். அவரின் விண்ணப்பப்படிவத்தை சான்றுப்படுத்துகிறேன். இந்நியமனம் அவருக்கு கிடைக்கப்பெற்றால் இங்கு அவர் வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்கப்படுவார்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
திகதி :-----.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்.)

05-278

## சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

### மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுனர்களின் சேவைக்கு வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிக்காக சுகாதார பட்டதாரிகள் ஆட்சேர்ப்பு - 2019

1. சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுனர் வழிகாட்டல்கள் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறிகளுக்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள தகுதியுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2. பதவிக்கான கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்.-**

| குறியீட்டு இலக்கம் | வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு பாடநெறி | பூர்த்தி செய்யப்பட வேண்டிய பட்டம் |
|---|---|---|
| 1. | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | மருத்துவ இரசாயனவியலாளர் (B. Sc. MLS) |
| 2. | மருந்தாளர் | மருந்தாளர் (B. Phram)<br>விஞ்ஞானமானி (மருந்தாளர்) விஷேட (B. Sc. Pharmacy) ) |
| 3. | பௌதீக சிகிச்சையாளர் | பௌதீக சிகிச்சையாளர் (B. Sc. Physiotherapy) |
| 4. | கதிரியலாளர் | கதிரியல் சிகிச்சையாளர் (B. Sc. Radiotherapy)<br>கதிரியல் விஞ்ஞானமாணி (B. Sc. Radiography) |

**3. ஏனைய பொதுத் தகைமைகள் :**

(அ) 2019.06.14 ஆந் திகதிக்கு 18 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.
(ஆ) உரிய பட்டம் செல்லுபடியாகும் திகதி விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாக இருக்க வேண்டும்.
(இ) சிறந்த உடல், உள ஆரோக்கியமுள்ளவராக இருக்க வேண்டும்.

**4. விண்ணப்பிக்கும் முறை:**

(அ) A4 அளவு கொண்ட கடதாசியை பயன்படுத்தி இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு அமைவாக (இலக்கம் 1 தொடக்கம் 09 வரை முதல் பக்கத்திலும், 10 தொடக்கம் 13 வரை இரண்டாம் பக்கத்திலும் உள்ளடக்குவதற்கு) விண்ணப்பங்கள் தயாரிக்க வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்தில் "பற்றுச்சீட்டு" எனும் இடத்தில் இலங்கை வங்கி, தப்பிரபேன், இல. 7041318 "சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் - பரீட்சைக்கட்டணம் அறவிடல்" எனும் கணக்கிற்கு ரூபா 300 ஐ வரவு வைத்து பற்றுச்சீட்டை கழறாதவாறு ஒட்ட வேண்டும். (பற்றுச்சீட்டை ஒட்டுவதற்கு முன் அதன் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளவும்)

(இ) விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது சட்டத்தரணி அல்லது பிரசித்த நொத்தாரிசு அல்லது முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல் செய்யக்கூடிய பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா 3,93,684 இற்கு மேற்பட்ட வருட சம்பளம் பெறும் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவிநிலை தர பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ) முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் 9" × 4" அளவு கொண்ட கடித உறையில் இட்டு, அந்த கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நிறைவுகாண் மருத்துவ சேவைக்கு பயிலுநர்களாக பட்டதாரிகளை ஆட்சேர்த்தல் - 2019" எனவும் உரிய பட்டம் மற்றும் கல்வி ஆண்டு என்பவற்றைக் குறிப்பிட்டு 2019.06.14 ஆந் திகதிக்கு முன்னர் "பணிப்பாளர் (நிர்வாகம் - நிறுவனம்) சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, சுவசிறிபாய, 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

5. அரசாங்க அல்லது அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனங்களில் கடமையாற்றுபவர்கள் தங்களது விண்ணப்பங்களை தமது திணைக்கள தலைவர்கள் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும். அத்துடன் இது வெளிவாரியான ஆட்சேர்ப்பு என்பதால்,

உரிய பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்தால் அல்லது நிறைவு செய்ய முடியாதவிடத்து தற்போது வகிக்கும் பதவிக்கு திரும்ப செல்ல முடியாதென்பதை கவனத்தில் கொள்ளவும்.

6. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது என்பதுடன், உரிய தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும் இவ்வறிவித்தலுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. ஒவ்வொரு பயிற்சி நெறிகளுக்கும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பட்டதாரிகளில் பட்டம் செல்லுபடியாகும் திகதி (Effective Date) மற்றும் பட்டத்தின் தரத்திற்கான பொது மதிப்பீடு (GPA) அடிப்படையாகக் கொண்டு திறமைப்பட்டியல் தயாரித்து ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இந்த பட்டதாரிகள் இணைத்துக் கொள்வதற்காக இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் இறுதித்திகதியான 2018.01.08 இற்கு பின்னர் பட்டம் பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

8. வெற்றிடங்களின் எண்ணிக்கையை விடவும் அதிகமான பட்டதாரிகள் விண்ணப்பித்திருப்பின் வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறிக்கு ஆட்சேர்ப்பதற்கான பொது அறிவு மற்றும் உளச்சார்பு தொடர்பான 01 மணித்தியாலத்தைக் கொண்ட வினா பத்திரத்தைக் கொண்ட எழுத்துப்பரீட்சையொன்று நடாத்தி அப்பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெறும் தொடருக்கமைய ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு சமமான எண்ணிக்கையினர் ஆட்சேர்க்கப்படும். நேர்முகப்பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் மற்றும் அதன் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

(1) பிறப்புச்சான்றிதழ்;
(2) பட்டச்சான்றிதழின் மூலப்பிரதி (இதன் சான்றுறுதி செய்த பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்);
(3) க. பொ. த. (சா/த) மற்றும் க. பொ. த. (உ/த) பரீட்சை பெறுபேறுகளின் மூலப்பிரதி;
(4) தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரம்;
(5) தாம் விண்ணப்பிக்கும் மாவட்டத்தினுள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினமான 2019.06.14 இற்கு கிட்டிய 03 வருடத்திற்கு தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

I. வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக பிரதேச செயலாளரின் துணை ஒப்பமிட்ட கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் (கிராம அலுவலர் சான்றிதழ்)

9. **பயிற்சித் திட்டம்** :

| குறியீட்டு இலக்கம் | பயிற்சித்திட்டத்தின் பெயர் | பயிற்சிக்காலம் | பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளும் மொழி |
|---|---|---|---|
| 01 | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | 6 மாதங்கள் | ஆங்கிலம் |
| 02 | மருந்தாளர் | 6 மாதங்கள் | ஆங்கிலம் |
| 03 | பௌதீக சிகிச்சையாளர் | 6 மாதங்கள் | ஆங்கிலம் |
| 04 | கதிரியலாளர் | 6 மாதங்கள் | ஆங்கிலம் |

I. நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு விண்ணப்பதாரிகளுள் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் உரிய வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறியை தொடர்வதற்காக பயிற்சிக் கல்லூரிகளுக்கு இணைத்துக்கொள்ளப்படுவர். கற்கை நெறிகள், மேற்படி வர்த்தமானி அறிவித்தலில் அந்தந்த கற்கை நெறிகளுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள மொழிகளில் நடத்தப்படும்.

II. பயிற்சிப் பாடசாலைகளுக்கு உள்வாங்கப்படும் பயிலுநர்கள் பயிற்சிக் கல்லூரிகளில் நடைமுறையில் உள்ள சட்டதிட்டங்களுக்கும் மற்றும் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் காலத்திற்குக்காலம் வெளியிடப்படும் கட்டளைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

III. பயிற்சியின் நிறைவில் பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்யாத அல்லது வேலை மற்றும் நடத்தை திருப்திகரமற்ற அல்லது தாம் உள்வாங்கப்பட்ட பயிற்சிப் பாடசாலையின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட தவறும் பயிலுநர்கள் எந்த சந்தர்ப்பத்திலும் எவ்வித நட்டஈடுகளும் இன்றி பயிற்சியை முடிவுக்குக் கொண்டுவரப்படும்.

IV. பயிற்சிக்காலத்தில் பயிலுநர்களுக்கு அரச நிர்வாக சுற்றறிக்கை 03/ 2016 இன் விதிமுறைகளுக்கு அமைய கொடுப்பனவு வழங்கப்படும்.

V. பயிற்சிப்பாடசாலைக்கு பயிற்சிக்காக உள்வாங்கப்படும்போது பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்வதாகவும், அப்பயிற்சியை இடைநடுவில் கைவிடுவதில்லை எனவும், அந்த பயிற்சியை முழுமையாக நிறைவு செய்த பின்னர் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால் குறைந்த பட்சம் ஐந்து வருடங்கள் (05) உரிய பதவியில் சேவையாற்றுவதாகவும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தத்திற்கும், பிணைக்கும் உடன்படல் வேண்டும். பயிற்சியின்போது பயிற்சியிலிருந்து விலகினால் அல்லது பயிற்சியை இடைநடுவில் கைவிட்டால் அல்லது மேற்படி III ஆவது பந்தியின் பிரகாரம் பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது நியமனம் பெற்று ஐந்து (05) வருடங்கள் உரிய பதவியில் சேவை செய்வதற்கு தவறினால் பயிற்சிக்காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிடப்பட்ட செலவுகள் ஒப்பந்தம் மற்றும் பிணைக்குரிய பணம் என்பன அவரினால் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சிற்கு செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் அப்பணத்தை அறவிடுவதற்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

10. **சேவையில் இணைத்துக்கொள்வதற்கான நியமங்கள்** : பயிற்சி முடிவில் பதவியில் நிரந்தர நியமனம் செய்தல்/ செய்யாமல் விடும் தீர்மானம் அச்சந்தர்ப்பத்தில் உள்ள பதவி வெற்றிட அளவினைப் பொறுத்ததாகும். அதன் பிரகாரம் உரிய பதவியில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு தீர்மானித்தால் விண்ணப்பதாரி பயிற்சி பெற்ற பாடநெறிக்கு குறித்த பயிற்சி நெறியின் நிபந்தனை மற்றும் வெற்றிடங்களின் அடிப்படையில் குறித்த பதவியில் III ஆம் தரத்திற்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேற்படி குறியீட்டு இலக்கம் 1, 2, 3, 4 ஆல் குறிப்பிடப்பட்ட நிறைவுகாண் தொழில்வல்லுனர் சேவையின் அரச நிர்வாக சுற்றறிக்கை 6/2016 இன்படி, MT - 6 - 2016 இன் பிரகாரம் ரூபா 32,080.00 - 10 × 445 - 11× 660 - 10 × 730 - 10 × 750 - ரூபா 58,590.00 எனும் சம்பள அளவு உரித்தாகுவதுடன், கொடுப்பனவுகள் அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் விதிமுறைகளுக்கு அமைய வழங்கப்படும்.

11. விண்ணப்பத்தை நிரப்பும்போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் மற்றும் விபரங்களை மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் உள்ளடக்கவும். பயிற்சிக்காக இணைத்துக்கொள்ளும் போதும் நியமனம் பெற்ற பின்பும் மேற்படி சான்றிதழ்கள் பொய்யானவை என நிரூபனமானால், சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கும், வழங்கப்பட்ட நியமனம் இரத்துச் செய்யப்பட்டு பயிற்சியிலிருந்து/ பதவியிலிருந்து நீக்கப்படுவதோடு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன், மீண்டும் அரசாங்க சேவையில் இணையமுடியாதவாறு கருப்புப்பட்டியலில் அவருடைய பெயர் சேர்க்கப்படுவதுடன், பயிற்சிக் காலத்தில் இவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிட்ட செலவினங்கள் மற்றும் பிணைக்குரிய பணம் அவரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் உரிய பயிற்சி நெறியை தொடர்வதற்கும் மற்றும் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை உறுப்படுத்துவதற்கு பயிற்சியின் முதல் மாதத்திற்குள் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். மருத்துவ பரிசோதனையின்போது தகுதியற்றவராக காணப்படுமாயின் விண்ணப்பதாரிகள் பயிற்சியைத் தொடர்வதற்கு தகுதியற்றவர்களாக கருதப்படுவார்.

13. மேற்படி இணைத்துக் கொள்ளப்பட்ட சகலரும் அரச ஊழியர்களுக்கான சகல சட்ட திட்டங்களுக்கும், இலங்கைச் சனநாயக சோசிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் சட்டதிட்டங்களுக்கும், சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் தீர்மானிக்கப்படும் கொள்கைகள், நிதிப்பிரமாணம் மற்றும் ஏனைய சட்டதிட்டங்களுக்கும், அரசினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் சட்ட திட்டங்கள், கட்டளைகள் என்பவற்றிற்கும் கட்டுப்படல் வேண்டும்.

14. பயிற்சிக்கு இணைத்துக் கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சி கல்லூரிகளில் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு இவ்வமைச்சு கட்டுப்பட்டில்லை. அவ்வாறு வழங்கப்பட்டால் மதிப்பீட்டு வாடகை, நீர் மற்றும் மின்சாரம் போற்றவற்றிற்கு கட்டணம் அறவிடப்படும்.

15. பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளல் தொடர்பாக இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்வாங்கப்பட்ட அல்லது உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றினால், சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித்தீர்மானமாகும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி அறிவித்தல்களில் ஏதேனும் ஒவ்வாமை எழும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே சரியானது எனக்கொள்ளப்படும்.

வசந்தா பெரேரா,
செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும்
சுதேச வைத்திய அமைச்சு.

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
'சுவசிறிபாய',
385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2019, ஏப்பிறல் 27.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுநர் சேவைக்கு வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறிக்காக பட்டதாரிகள் ஆட்சேர்ப்பு - 2019**

விண்ணப்பத்தை நிரப்புவதற்கு முன் வர்த்தமானி அறிவித்தலை முழுமையாக வாசிக்கவும்.

| பயிற்சி நெறிக்குரிய குறியீட்டு இலக்கம் (வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம்) |
|---|
| |

* விண்ணப்பிக்கும் பாடநெறி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

* விண்ணப்பிக்கும் பாடநெறி (ஆங்கிலத்தில்) :-----.

1. (அ) முதல் எழுத்துக்களுடன் பெயர் :-----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உ+ம் :- A. B. C. SILVA )

(ஆ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.

(இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2. தேசிய ஆளடையாள அட்டை இல. :----. (பிரதியொன்றை இணைக்கவும்)

3. தபால் முகவரி : சிங்களத்தில்/தமிழில் ஆங்கிலத்தில்

----------------- -------------

----------------- -------------

----------------- -------------

4. (அ) நிரந்தர முகவரி : சிங்களத்தில்/தமிழில் ஆங்கிலத்தில்

----------------- -------------

----------------- -------------

----------------- -------------

(ஆ) தொலைபேசி இலக்கம் :

கையடக்க: | | | | | | | | | | |  நிலையான: | | | | | | | | | | |

(இ) வதிவிட மாவட்டம் : சிங்களத்தில்/தமிழில் :----. ஆங்கிலத்தில் :----.

(ஈ) நீங்கள் இம்மாவட்டத்தில் நிரந்தர வதிவிடமுடையவரா? ஆம்/இல்லை :----.

(உ) ஆம் எனின், எவ்வளவு காலத்திலிருந்து :----.

5. பிறந்த திகதி : ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.
2019.06.14 ஆந் திகதியன்று வயது : வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

6. பால் : ஆண்: ☐ பெண்: ☐

7. நீங்கள் இலங்கைப் பிரசையா? ஆம்: ☐ இல்லை: ☐

8. விவாக நிலைமை : விவாகமானவர்: ☐ விவாகமாகாதவர்: ☐

9. கல்வித் தகைமைகள் :

| தொ. இல. | சித்தியடைந்த பட்டம் | சித்தி | தரத்தின் பொது மதிப்பீடு (GPA) மற்றும் பட்டம் செல்லுபடியாகும் திகதி | பல்கலைக்கழகம் | கல்வியாண்டு | போட்டிப் பரீட்சைக்கு தோற்றும் மொழி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

10. நீங்கள் ஏதாவது குற்றச்செயலுக்காக நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா? ஆம் : ☐ இல்லை : ☐
(பொருத்தமான கூட்டில் "✓" குறிப்பிடுக.
ஆம் எனில் காரணத்தைக் குறிப்பிடுக :-

-----------------------------------------------------------------
-----------------------------------------------------------------
-----------------------------------------------------------------

11. விண்ணப்பதாரியின் சான்றிதழ் :

(அ) என்னால் இந்த வர்த்தமானி அறிவித்தலை தெளிவு பெற்று அதில் குறிப்பிடப்பட்டுள்ள சகல நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு இவ்விண்ணப்பப்பத்திரம் நிரப்பப்பட்டதென்றும் நான் வேறு எந்தவொரு முழுநேர பாடநெறியில் ஈடுபடவில்லை என்றும் இவ் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ளவை அனைத்தும் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

(ஆ) இங்கு என்னால் கொடுக்கப்பட்ட விபரங்களில் ஏதாவது பிழையென அல்லது தவறு எனக் காணுமிடத்து நான் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என நான் நன்கறிவேன்.

இலங்கை வங்கி, தெப்ர பிறேன் கிளையில், இல. 7041318 எனும் கணக்கிற்கு "சு. சே. ப. நா. பரீட்சைக்கட்டணம் அறவிடல்" எனும் கணக்கிற்கு உரிய பணத்தை செலுத்தி அந்த பற்றுச்சீட்டை கழராத விதத்தில் இங்கு ஒட்டவும்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

12. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:-**

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி .......................... அவர்கள் எனக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சயமானவர் என்றும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் ........... ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(பதவி முத்திரையுடன்)

திகதி :----.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :
பதவி :
முகவரி :

13. **விண்ணப்பதாரி அரச ஊழியராயின்/ மாகாண அரச சேவையில் ஊழியராயின் திணைக்கள தலைவரின் உறுதிமொழி : (பொருத்தமற்றவற்றை வெட்டிவிடவும்)**

(i) மேற்படி விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ................ அவர்கள் இத்திணைக்களத்தில் .............. பதவி வகித்தார் என உறுதிப்படுத்துகின்றேன்.

(ii) விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என உறுதிப்படுத்துவதுடன், இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டால், அவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என அறியத்தருகின்றேன்.

(iii) மேலும், இது வெளிவாரியான ஆட்சேர்ப்பு என்பதுடன், உரிய பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்தால் அல்லது நிறைவு செய்ய முடியாதவிடத்து தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் முடியாதென்பதை அவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது என்பதையும் அறியத்தருகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்,
பதவி முத்திரை.

* திணைக்களத் தலைவரின் பெயர் :-----.

* பதவி :-----.
முகவரி :----.
திகதி :----.

5-501